2023 ஜனவரி 13]

அதேபோன்று மேட்டூரில் ஏற்கெனவே ஒரு வட்ட அலுவலகம் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. அதற்கடுத்து ஆத்தூரில் துவக்குவதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை. எனவே, வரக்கூடிய நாட்களில், தேவை ஏற்படின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

27—

மருத்துவக் காப்பீட்டுத் திட்ட அட்டை

***50605—திரு. S. சதாசிவம்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மருத்துவமனைகளையும் சேர்த்து, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட அட்டையை அங்கீகரிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மற்றும் பிரதம மந்திரி மக்கள் ஆரோக்கிய திட்டத்தையும் ஒருங்கிணைத்து, தமிழகத்தைப் பொறுத்தவரையில் 819 அரசு மருத்துவமனைகள் மற்றும் 956 தனியார் மருத்துவமனைகள் என்று 1,775 மருத்துவமனைகளில் இந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், மக்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட அட்டையைப் பயன்படுத்தி, தமிழகத்தைப் பொறுத்தவரையில் 1,39,87,495 பயனாளி குடும்பங்கள் இலவசமாக சிகிச்சை பெற்று வருகிறார்கள். மேலும் தேவைக்கேற்ப, கூடுதல் மருத்துவமனைகள்

காப்பீட்டுத் திட்ட விதிமுறைகளைப் பூர்த்தி செய்யும்பட்சத்தில், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் தொடர்ந்து அங்கீகரிக்கப்படும். இது ஒரு தொடர் நடவடிக்கையாகும். மேலும், தரம் மற்றும் மருத்துவச் சேவைகள் குறித்து நிர்ணயிக்கப்பட்ட திட்ட விதிமுறைகளை முழுமையாகப் பூர்த்தி செய்திருக்கும்பட்சத்தில், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் அந்த மருத்துவமனை அங்கீகரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எனது சார்பில் 'தை பொங்கல்' வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2009 ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது, அறிமுகப்படுத்தப்பட்ட மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மக்களை நோயிலிருந்து காப்பாற்றிய உன்னதமான நல்ல திட்டம். இந்தத் திட்டம் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டமாக 2011 ஆம் ஆண்டில் மாற்றப்பட்டது. மாற்றப்பட்ட காப்பீட்டுத் திட்டத்தில் பல குளறுபடிகள் இருக்கின்றன. 75 சதவிகித மக்கள் தனியார் மருத்துவமனையை நம்பி வாழ்கின்றார்கள். 25 சதவிகித மக்கள் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். உதாரணமாக, 2009 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட காப்பீட்டுத் திட்டத்தில் இன்றுவரை அதே தொகைதான் வழங்கப்படுகிறது. உதாரணத்திற்கு, அறுவை சிகிச்சை என்றால், தனியார் மருத்துவமனையில் ரூ.3½ இலட்சத்திற்கு மேல் வாங்கப்படுகிறது. காப்பீட்டுத் திட்டத்தில் வழங்கப்படும் தொகை சுமார் 1,40,000 ரூபாய்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வரலாறு போதும். கேள்வியைக் கேளுங்கள். என்ன வேண்டுமென்று கேளுங்கள்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முக்கியமானது. மக்கள். . .

2023 ஜனவரி 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதனால்தான் சொல்கிறேன், கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் இதுபோல் நிறைய திட்டங்கள் வேண்டுமென்பதற்காகத்தான் இதைக் கேட்கிறேன். அவர்களும் செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். தமிழ்நாட்டு மக்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் எதிர்பார்க்கிறார்கள். ஏழை மக்களுக்காக மாண்புமிகு முதல்வர் அவர்களும் செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதால், நாங்கள் கேள்வி கேட்கிறோம். வேறொன்றும் இல்லை. அதேபோல், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நல்ல அமைச்சர்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள், கேள்வியைக் கேளுங்கள். உங்களுக்கு என்ன வேண்டுமென்று சொல்லுங்கள்.*

திரு. S. சதாசிவம்: *அதைத்தான் நான் இப்போது கேட்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இப்போது அதைச் சொல்லுங்கள்.*

திரு. S. சதாசிவம்: *எனக்கு 5 நிமிடங்கள் தாருங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நல்ல அமைச்சர் என்று. . .*

திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியைத்தான் கேட்கிறேன். காப்பீட்டுத் திட்ட குளறுபடிகளைப் பற்றிச் சொல்கிறேன். எங்களுடைய. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு முழுவதும் 550-க்கும் மேற்பட்ட மருத்துவமனைகள் அடையாளம் காட்டப்பட்டு, காப்பீட்டுத் திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. உங்கள் கேள்வி என்ன, எந்த ஊரில் வேண்டுமென்று கேளுங்கள்.*

திரு. S. சதாசிவம்: *கேள்வி என்னவென்றால், இருதய அறுவை சிகிச்சைக்கு தனியார் மருத்துவமனைகளில் 3½ இலட்சம் ரூபாய் கேட்கிறார்கள். மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் 1,40,000 ரூபாய்தான் வழங்குகிறார்கள். 11 வருடங்கள் கடந்தும் அதே தொகைதான் கொடுக்கிறார்கள். அதனால், சில மருத்துவமனைகள் காப்பீட்டுத் திட்டத்தினை எடுத்துக்கொள்வதில்லை. படுக்கை*

வசதிகள் இல்லை, மருத்துவர் விடுப்பில் சென்று விட்டார் என்று சொல்லி புறக்கணிக்கிறார்கள். அந்தத் தொகையை உயர்த்தி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய மருத்துவர் அய்யா அவர்களும், மருத்துவர் முன்னாள் மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் அண்ணன் திரு. அன்புமணி அவர்களும் இலவச மருத்துவம் வேண்டுமென்று தொடர்ந்து தமிழ்நாடு அரசை வலியுறுத்துகிறார்கள். சாதாரண தலைவலியிலிருந்து உயிர் காக்கும் அறுவை சிகிச்சை வரையிலும் நம்முடைய அரசு அதை இலவசமாகக் கொடுக்க வேண்டும். அதேபோல, இலவச கல்வி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாட்டில் அரசு மருத்துவமனைகளில் நீங்கள் சொல்கின்ற இலவச மருத்துவம்தான் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். உங்கள் கேள்வி, காப்பீட்டுத் திட்டத்தின் தொகையை உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டிருக்கிறீர்கள். இன்னொரு கேள்வியும் இருக்கிறது. மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு இன்னொரு கேள்வி இருக்கிறது.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல, 2009 ஆம் ஆண்டு, ஜூலை திங்கள் 23 ஆம் தேதி அன்றைய தமிழகத்தின் முதல்வர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் கொண்டு வரப்பட்ட மகத்தான திட்டம்தான், கலைஞர் காப்பீட்டுத் திட்டம். அது கொண்டு வரப்பட்ட நாள் முதல் இன்று வரை இந்தியாவிலேயே தமிழகம் முதலிடத்தில் இருந்துகொண்டிருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. (மேசையைத் தட்டும் ஒலி) மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, கடந்த ஆட்சிக் காலத்தில் 699 ரூபாய் premium தொகையாக இருந்தது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, அதை 849 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். கடந்த காலத்தில் காப்புறுதித் தொகை ஒரு வருடத்திற்கு 2 இலட்சம் ரூபாயாக இருந்தது; இப்போது அதை 5 இலட்சம் ரூபாயாக நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உயர்த்தித் தந்திருக்கிறார்கள்.

கடந்த காலத்தில் 1,450 சிகிச்சை முறைகள் மட்டுமே இந்தக் காப்பீட்டுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இப்போது

2023 ஜனவரி 13]

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீவிர அறிவுறுத்தலுக்கேற்ப 1,513 சிகிச்சை முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த காலத்தில் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளின் எண்ணிக்கை 970; ஆனால், இன்றைக்கு அங்கீகரிக்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிற மருத்துவமனைகளின் எண்ணிக்கை 1,775. கடந்த காலத்தில் பிரத்யேக சிகிச்சைகள் என்பது 2; இந்த காலத்தில் பிரத்யேக சிகிச்சைகள் என்பது 8. அனைத்தையும் கடந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, இருதய மாற்று அறுவை சிகிச்சை, கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை, கணைய மாற்று அறுவை சிகிச்சை, கருவிழி மாற்று அறுவை சிகிச்சை, எலும்பு மாற்று அறுவை சிகிச்சை, மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை, தோல் மாற்று அறுவை சிகிச்சை என்று இந்தியாவிலேயே பிரத்யேகமாக மாற்று அறுவை சிகிச்சைகளுக்கு தமிழகம்தான் தொடர்ந்து முதலிடத்தில் இருந்துகொண்டிருக்கிறது.

முற்பகல் 11–10

குடும்பம் ஒன்றுக்கு 5 இலட்சம் ரூபாய் என்பதைக் கடந்து, உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளுக்கு அதிகபட்சமாக 22 இலட்சம் ரூபாய் வரை வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதனால்தான் இந்தியாவில் இருக்கிற பல்வேறு அரசு நிர்வாகங்கள் தமிழக அரசை தொடர்ந்து பாராட்டிக் கொண்டிருக்கின்றன. ஒன்றிய அரசின் சுகாதார செலவுக் கணக்கு ஆய்வகம், அண்மையில் என்ன சொல்லியிருக்கிறது என்பதைச் சொல்கிறேன். நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டங்களின் செயல்பாடுகளில் தமிழக அரசின் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் அதிகத் தொகை செலவு செய்யப்பட்டிருக்கிறது என்று ஒன்றிய அரசின் சுகாதார செலவுக் கணக்கு ஆய்வகம் சொல்லியிருக்கிறது.

அதேபோல், தேசிய அளவில் பிரதம மந்திரி காப்பீட்டுத் திட்ட பயனாளிகளில் 5–ல் ஒருவர் தமிழ்நாட்டு பயனாளி ஆவார். மாநிலங்களிலுள்ள வலுவான சுகாதார கட்டமைப்பே இதற்குக் காரணமாக உள்ளது என்று National Health Authority–யினுடைய தேசிய சுகாதார அலுவலர் அறிவித்திருக்கிறார். அதையும் கடந்து, கடந்த பத்து ஆண்டுகளில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் சீரிய செயல்பாட்டினால், ஏழை மக்களின் மருத்துவ நிதிச் சுமை குறைந்து, அதனால் தமிழ்நாட்டின் வறுமை

நிலை குறைந்திருக்கிறது என்று நிதி ஆயோக் சொல்லியிருக்கிறது. மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த திட்டத்தை, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கடந்த ஆண்டு ஆண்டொன்றுக்கு 1,500 கோடி ரூபாய் என்று அறிவித்து, ஐந்தாண்டுகளுக்கு 7,500 கோடி ரூபாய் வரை உயர்த்தித் தந்திருக்கிறார்கள். இது உலக சாதனை. இது இந்திய அளவில் தமிழ்நாடு படைத்துக் கொண்டிருக்கின்ற மகத்தான சாதனை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்கள். நன்றாக, விரிவாக பதிலை வாங்கிவிட்டீர்களா?

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஒரு கோரிக்கை வைக்கிறேன். ஐந்து நிமிடம் எனக்குக் கொடுங்கள். இது முக்கியமான ஒரு துறை. உயிர் காக்கின்ற துறை. நான் கோரிக்கை வைக்கிறேன். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. கேள்வியைக் கேளுங்கள். ஏதாவது ஒரு கேள்வி. (குறுக்கீடு) என்ன வேண்டுமென்று சொல்லுங்கள். . . (குறுக்கீடு)

திரு. S. சதாசிவம்: சில தனியார் மருத்துவமனைகளில் காப்பீட்டுத் திட்டத்தை எடுத்துக்கொள்வதில்லை. சாதாரண மக்கள், விவசாய மக்கள், நடுத்தர மக்கள், தனியார் மருத்துவமனைகள் எவை காப்பீட்டுத் திட்டத்தில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் நல்ல விவரமான உறுப்பினர். அவர்கள் எடுத்துக்கொள்ளவில்லை என்றால், அவர்களை யாரும் கட்டாயப்படுத்த முடியாது. உங்களுக்கு ஏதாவது மருத்துவமனைக்கு வேண்டுமா என்று கேளுங்கள். இந்த மருத்துவமனைக்குத் தாருங்கள் அல்லது என்ன விஷயம் என்று கேள்விக்கு வந்து விடுங்கள்.

திரு. S. சதாசிவம்: நம்முடைய மருத்துவத் துறையிலிருந்து United India Insurance Company-க்கு மனு போகும்பொழுது சாதாரண M.B.B.S. அல்லது கால்நடை மருத்துவரைக் கொண்டு அவர்கள் திட்டங்களைக் கொடுக்கிறார்கள். M.D., M.S. படித்த மருத்துவர்களால்தான் இந்த நோய்க்கு இவ்வளவு amount என கொடுக்க முடியும். அதில் குளறுபடிகள் உள்ளன. . .

2023 ஜனவரி 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *1,513 சிகிச்சை முறைகளுக்கு, 1,775 மருத்துவமனைகளில் காப்பீட்டுத் திட்டத்தில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. உங்களுக்கு இப்போது (குறுக்கீடு) என்ன சேர்க்க வேண்டுமென்று, நீக்க வேண்டுமென்று சொல்லுங்கள். (குறுக்கீடு)*

திரு. S. சதாசிவம்: *குறிப்பாக, மேட்டூர் தலைமை மருத்துவமனை கலைஞர் அவர்கள் ஆட்சியில் தரம் உயர்த்தப்பட்டது. அந்த மேட்டூர் தலைமை மருத்துவமனையில், அறுவை சிகிச்சை செய்யப்படுவதில்லை. 63 கிலோ மீட்டர். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எந்த நோய்க்கு அறுவை சிகிச்சை செய்யவில்லை என்று சொல்லிக் கேளுங்கள்.*

திரு. S. சதாசிவம்: *இருதயம் மற்றும் மூட்டு மாற்று அறுவை சிகிச்சைகளுக்காக சேலத்திற்கு 63 கிலோ மீட்டர் தூரம் செல்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது செய்யப்படுமா என்று கேட்கிறீர்கள். அமைச்சர், பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு)*

திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம் மட்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சொல்லுங்கள். சொல்லுங்கள். முடியுங்கள். (குறுக்கீடு) நேரமில்லை. சீக்கிரம் கேளுங்கள்.*

திரு. S. சதாசிவம்: *சரி. காப்பீட்டுத் திட்டத்திலே மேட்டூருக்கு சிலர் அவசர சிகிச்சைக்கு வருகிறார்கள். காப்பீட்டுத் திட்ட அட்டை இல்லை என்றவுடன், உடனே அங்கேயே ஓர் அலுவலகம் அமைத்து, காப்பீட்டுத் திட்ட அட்டை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு* CT scan, MRI scan *வசதிகளை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்தக் காப்பீட்டுத் திட்டத்தில் ஏழை மக்களைக் காப்பாற்றுவதற்கு கூடுதல் தொகை ஒதுக்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2023 ஜனவரி 13

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதம மந்திரி காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், இதுவரை 77 இலட்சம் பேர் மட்டுமே இதில் தகுதியுடையவர்கள் என்று அறியப்பட்டிருக்கின்றது. ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரை, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், இன்றைக்குப் புதிதாகக் காப்பீட்டுத் திட்டத்தில் யாரெல்லாம் சேர்ந்துகொள்ளலாம் என்பதை அறிவித்ததற்கேற்ப, 1,39,87,495 பயனாளி குடும்பங்கள் பயன்பெற்று வருகிறார்கள். சேலத்தைப் பொறுத்தவரை, புதிதாக மேட்டூர் தொகுதியில் இருப்பவர்கள் இந்தத் திட்டத்தின்கீழ் பயன்பெற வேண்டுமென்று அவர் கருதினாரேயானால், அங்கே இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்குச் சென்றால், புதிய பயனாளிகளை அதில் இணைத்துக்கொள்வதற்கு வசதியாக இருக்கும்.

தனியார் மருத்துவமனைகளில் இது அனுமதிக்கப்படுவதில்லை என்று சொன்னார். தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கான தனியார் மருத்துவமனைகள் இருக்கின்றன. அதில் 956 தகுதி படைத்த தனியார் மருத்துவமனைகளில் இத்திட்டத்தின் மூலமாகச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. 30 படுக்கைகளுக்கு மேலாக உள்ள மருத்துவமனைகள் தகுதி படைத்த மருத்துவமனைகளாகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. அப்படி ஏதாவது ஒரு மருத்துவமனை, தகுதி படைத்தது என்று அவர் உறுதிப்படுத்துவாரேயானால், அதையும் இந்தத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள தயாராக இருக்கிறோம்.

முற்பகல் 11–15

அடுத்து, மேட்டூர் அரசு மருத்துவமனை குறித்து அவர் சொன்னார். மேட்டூர் அரசு மாவட்ட மருத்துவமனையைப் பொறுத்தவரையில், நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 1¼ கோடி ரூபாய் செலவில் Integrated Laboratory Services-ஐ தொடங்குவதற்கு இன்றைக்கு அறிவுறுத்தியிருக்கிறார். 2½ கோடி ரூபாய் செலவில் மருத்துவ உபகரணங்களை வாங்கித் தந்திருக்கிறார்.

அவருடைய தொகுதியிலுள்ள கொளத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 60 இலட்சம் ரூபாய் செலவில் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. மேட்டூர் மாதவிகுட்டை நலவாழ்வு மையத்தில் 25 இலட்சம் ரூபாய் செலவில் கட்டடம் கட்டப்பட்டு

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஜனவரி 13]

வருகிறது. மல்லிகுண்டம் துணை சுகாதார நிலையத்திற்கு 39 இலட்சம் ரூபாய் செலவில் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. கூனாண்டியூரில் 27 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட கட்டடம் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.A. பாண்டியன், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

28—

சார்—பதிவாளர் அலுவலகக் கட்டடம்

***15168—திரு. K.A. பாண்டியன்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தொகுதி, சிதம்பரம் நகரில் உள்ள சார்—பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் நகரிலுள்ள ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலக வளாகத்தில் மாவட்டப் பதிவாளர் நிருவாக அலுவலகம், மாவட்டப் பதிவாளர் (தணிக்கை) அலுவலகம் மற்றும் 1 ஆம் எண் இணை சார்—பதிவாளர் அலுவலகம் ஆகிய அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. இவ்வலுவலகக் கட்டடம் 114 ஆண்டுகள் பழமையானது. இதுபோன்று பழமையான கட்டடங்களில் பல பதிவுத் துறை அலுவலகங்கள் இயங்கி வருவதை அறிந்துதான், கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் 100 ஆண்டுகளுக்கும் மேலான பழமையான கட்டடங்கள் புதுப்பிக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பின் அடிப்படையில், தற்போது உறுப்பினர் அவர்களால் கேட்கப்படும் இந்தக் கட்டடம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதனைப் புதுப்பிக்கும் நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. பழைய கட்டடத்தை அகற்றி, புதிய